**செப்டம்பர் - 26**

**"அதற்கு யேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டு வருகிறீர்கள். - எபே 2 : 20 - 22**

நாட்கள் கடந்து செல்லுகிறபடியால், இந்த ஆலயத்துக்குள்ள நம்முடைய மும்மடங்கனா சம்பந்தத்தை ஞாபகப்படுத்துவோமாக. 1. ஜீவனுள்ள கற்களாக நாம் இன்னமும் தயாராக்கப்படும் நிலையில் இருக்கிறோம். 2. ராஜரீகமான ஆசாரியக்கூட்டத்தின் அங்கங்களாக பெட்டியை சுமந்து கொண்டு கூடாரத்திலிருந்து ஆலயநிலைக்கு பவனி சென்று கொண்டிருக்கிறோம். சிலர் ஏற்கனவே உள்ளே சென்று விட்டார்கள். சிலர் இன்னமும் வழியில் இருக்கிறார்கள். 3. கர்த்தருடைய ஜனங்களாக நாம் தெய்வீக இரக்கம், நீதி, அன்பு, சத்தியம் இவைகளின் புதுப்பாட்டை அறிந்து அதை ஆவியோடும் கருத்தோடும் பாடுவதற்கு சமயம் வந்திருக்கிறது. இந்த ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் நம்முடைய பங்கை நிறைவேற்றிக்கொண்டு உண்மையுள்ளவர்களாய் இருப்போமாக. சீக்கிரத்தில் நமது ஓட்டம் முடிந்து விடும். கர்த்தரின் மகிமை ஆலயத்தை நிரப்பும். **- Z ’03, 443 (R 3282)**

கிறிஸ்துவே ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாய் இருக்கிறார். அதில் அப்போஸ்தலரும். சுவிசேஷ யுகத்தின் தீர்க்க தரிசிகளும் அஸ்திபார கற்களாயிருக்கிறார்கள். யேசு தலைமையான மூலைக்கல்லாயிருக்கிறார். மீதியான விசுவாசிகள் மற்றக் கற்கள். சுவிசேஷ யுகத்தில் இந்தக் கற்கள், தேவன், கிறிஸ்து இவர்களுடைய கரங்களில் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் தனித்தனியாகவும், ஒன்றுக்கொன்று இணக்கத்திலும் அவசியமான அறுப்புக்கும், உடைத்தலுக்கும், உளியால் செதுக்குதலுக்கும், வெட்டுதலுக்கும், தீட்டுதலுக்கும், தேய்தலுக்கும், வழவப்பாக்குதலுக்கும் தங்களை உட்படுத்த வேண்டும். ஒற்றுமையும் இசைவும் வேறுபட்டிருத்தலும், அவைகளுடைய ஆயத்தத்தைக் குறிப்பிடுகின்றன. இசைவாகவும் இணைந்தும் அழகாகவும் அவைகள் கட்டத்தில் வைத்துக் கட்டப்படும் பொழுது அவைகள் கர்த்தரின் மகிமையால் நிரப்பப்பட்டு, தேவனுடைய தாபர ஸ்தலமாகவும், மனுஷரோடு சந்திக்கிற இடமாகவும் உலகத்தாரை ஆசிர்வதிக்கும் இடமாகவும் ஆகும்.**! - P ’35, 118.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**மத் 16:16-18; 1பேது 2:4,5; ஏசா 28:16; மத் 21:42; சங் 118:22,23; எபே 4:14-16; 1கொரி 6:19; 2கொரி 6:16; யோவா 14:16-18,23; ரோம 8:9.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 188 (R 5710).**

**வினாக்கள் : இந்த வாரத்தின் சம்பந்தமாக இவ்வார அனுபவங்கள் என்ன? அவைகள் எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவற்றில் உதவியாக அல்லது தடையாக இருந்தவை எவை? எவ்விதமான சூழ்நிலைகளின் கீழ் அவை நிகழ்ந்தன? அவற்றின் பலன் என்ன?**